
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



கும்ப கோணத்து மங்க ளாம்பிகை
கொலு விருப்பது பாருங்கள்
நம்பி னூர்க்கருள் பொழியும் அன்னையை
நாடியே வந்து சேருங்கள்.

ஆகஸ்ட் 1989

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8

ஒலி 7

சுக்ல

ஆடி

ஆகஸ்ட்

1989

புண்ணியம் செழிப்பதாக! பொய்மைகள் தொலைவ தாக!
கண்ணியம் தழைப்பதாக! கடமைகள் உயர்வதாக!
எண்ணிய நடப்பதாக! இனியபா ரதத்தில் மீண்டும்
கண்ணியன் கீதைச் செல்வன் கண்ணனே பிறப்பானாக!

— கவியரசு கண்ணதாசன்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00

ஆண்டுச் சந்தா ரூ. 24-00



கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை



பட்டினத்தடிகள் திருவிழா: பேரவை நிகழ்ச்சி விவரம்

காவிரிப்பூம்பட்டினம் திருவெண்காடராகிய பட்டினத்தடிகளுக்கு நாளது சுக்கில ஹு ஆடி மீ 22 உ (6-8-89) ஞாயிறு முதல் ஆவணி மீ 1 உ (17-8-89) வியாழன் வரை 12 நாட்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் திருவிழா நடைபெற உள்ளது.

மேற்படி அற்புதத் திருவிழாவை ஒட்டி பேரவை நிகழ்ச்சிகளுக்கு நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

12-8-89 சனிக்கிழமை

12-8-89 - 7 ஆம் திருநாளன்று காலை 10-30 மணி அளவில் கோவை கற்பகம் தியேட்டர்ஸ் பி. லிட். தலைவர் கோனுபட்டு எஸ். எம்ஆர். எஸ். சுப்பையா செட்டியார் அவர்கள் பேரவை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்து தொடக்க உரையாற்ற இருக்கிறார்கள்.

காலை 11-00 மணிக்கு ''வீடணன் தமையனைப் பிரிந்து இராமனைச் சேர்ந்தது குற்றம்'' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற இருக்கிறது. முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் நடுவர் பொறுப்பேற்கிறார்கள். கவிஞர் திரு. இராகவன் முத்து வழக்குத் தொடுக்க டாக்டர் பழ. முத்தப்பன் மறுக்க இருக்கிறார்.

13-8-89 ஞாயிற்றுக்கிழமை

13-8-89 -8 ஆம் திருநாளன்று மாலை 4-30 மணி அளவில் ''முன்பிறந்து பின்பிறந்தான்'' என்ற தலைப்பில் 'பொற்கிழிக் கவிஞர்' திரு. சொ. சொ. மீ. சுந்தரம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.

மாலை 6-00 மணி அளவில் ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட். நிறுவனம் வழங்கும் நீதி மன்றம். (பாத்திரங்களாக வேடமிட்டு வாதிடும் புதுமை நிகழ்ச்சி) ''விடுதலை யாருக்கு?'' என்று தொடங்கும் வழக்கில் பூம்புகார் டாக்டர் ஆ. செகநாதன் நீதிபதியாகப் பொறுப்பேற்கிறார். இராவணனாக பேராசிரியர் திரு. பாஸ்கரபாண்டியனும் கோவலனாக மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பனும் துரியோதனனாக பேராசிரியர் திரு. நா. சுப்பிரமணியனும் பாத்திர மேற்கிறார்கள். செந்தமிழ்ச் செல்வி சு. சரசுவதி, பேராசிரியர் திரு. இரா. அன்பழகன் செல்வி நா. முத்தழகம்மை ஆகிய மூவரும் முறையே வழக்கறிஞர்களாகப் பொறுப்பேற்கிறார்கள். பதிவாளர்; இரசிகமணி திரு. ஆர்எம். சிதம்பரம் செட்டியார். இயக்குநர்: 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன். ஒப்பனைக் கலைஞர் திரு. தண்டபாணி.

14-8-89 திங்கட்கிழமை

14-8-89 - 9 ஆம் திருநாளன்று காலை 9-30 மணி அளவில் கவிஞர் திரு. சித. சிதம்பரம் ''பாமாலை'' வழங்குகிறார். காலை 10-00 மணி அளவில் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் ''அழகின் கொழுந்து'' என்ற தலைப்பில் உரையாற்றுகிறார். காலை 11-00 மணி அளவில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் 'மகாபாரதம்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகிறார்.

15-8-89 செவ்வாய்க்கிழமை

15-8-89 - 10 ஆம் திருநாளன்று கோவிலூர் ஆதீனம் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான



வலையபட்டியில் 18-5-89 அன்று, ஒன்பது நகரத்தார் பெரு மக்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் தே. இராமநாதன்செட்டியார் அவர்களுக்குப் பொன்னாடை அணிவிக்கும் காட்சி. அருகே வலையபட்டி எஸ்எம். நடராஜன் செட்டியார் அவர்கள்.

தேசிக சுவாமிகளுக்குப் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பு.

திருவிளக்குப் பூஜை

11-8-89 வெள்ளிக்கிழமையன்று மாலை **6-00** மணி அளவில் நகர விடுதியில் அனைத்து நகரக் கோயில்களையும் சேர்ந்த சுமங்கலிப் பெண்கள் பங்கு பெறும் திருவிளக்குப் பூஜை நடைபெற இருக்கிறது.

தினசரி தேவார இன்னிசையும் 8-8-89 12-8-89& 15-8-89 ஆகிய நாட்களில் ஸ்பெஷல் நாதசுரக் கச்சேரியும் நடைபெற உள்ளன.

திருவிழா மற்றும் பேரவை நிகழ்ச்சி ஏற்பாடுகளை டிரஸ்டி நா அரு. கா. அருணாசலம் செட்டியார் அவர்கள் கவனித்து வருகிறார்கள்.

அரிமா சங்கத் தலைவர் உல, சுப. உலகப்பன்

மதுரை மத்திய அரிமா சங்கத்தின் தலைவராக 1989-90 ஆம் ஆண்டுக்கு ஏற்கெனவே தேர்வு செய்யப் பெற்ற நடராஜ புரம் அரிமா உல. சுப. உலகப் பன் அவர்கள் 6-7-89 அன்று மதுரை எம். ஏ. சி. செண்பக லிங்க நாடார் -கிரோன்மணி அம்மாள் மன்றத்தில் நிகழ்ந்த மதுரை மத்திய அரிமா சங்க விழாவில் பதவியேற்றார்கள். அவர்களுடன் அரிமா ஆர். சோம சுந்தரம் அவர்கள் செயலாள ராகவும், ஆராவயலைச் சேர்ந்த



அரிமா ஆர் எம். எஸ். இராம சாமி அவர்கள் பொருளாளராக வும் பதவியேற்றார்கள். புதிய நிர்வாகிகளுக்கு 324. B அரிமா மாவட்ட ஆளுனர் அரிமா ஆர். குருமூர்த்தி MJF அவர்கள் பத விப் பிரமாணம் செய்து வைத் தார்கள்.

முன்னதாக இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் அரிமா திரு. வி. ஏ. பி. எம். சேரனும், முன் னாள் மகளிர் சங்கத் தலைவி அரிமா மகளிர் இராம லெட்சுமி யும், முன்னாள் செயலர் அரிமா திரு. கே. காசிவிஸ்வநாதனும் சங்கத்தின் நோக்கம், செயல் பாடுகள், மேற்கொண்ட சேவை கள் ஆகியவை பற்றி எடுத்து ரைத்தார்கள்.

அரிமா எஸ்பி. அழகப்பன் 324 B மாவட்ட ஆளுனர் அரிமா ஆர். குருமூர்த்தி அவர் களை அறிமுகப்படுத்திப் பேசினார். முன்னாள் மாவட்ட ஆளுனர் திரு. என். எம். ஆர். வி. சிவப் பிரசாத், மாவட்டப் பொரு ளாளர் அரிமா திரு. கோதண்ட ராமன், மண்டலத் தலைவர் அரிமா திரு. சண்முகசுந்தரம் ஆகியோரும் புதிய நிர்வாகி களைப் பாராட்டிப் பேசினார்கள்.

இவ்விழாவில் அரிமா உல. சுப. உலகப்பன் அவர்களின் துணைவியார் திருமதி கண்ணாத் தாள் உலகப்பன் அவர்கள் மதுரை மத்திய அரிமா மகளிர் சங்கத்தின் தலைவியாகவும், எஸ். இராமசாமி மத்திய லியோ சங் கத் தலைவராகவும் பொறுப்பேற் றார்கள்.

இவர்கள் அனைவரும் 1-7-1989 முதல் 30-6-1990 வரை ஓராண்டுக்கு இப்பதவியில் இருப்பார்கள்.

இவ்விழாவில் சிறப்பு விருந் தினர் அரிமா ஆளுனர் ஆர். குருமூர்த்தி அவர்களுக்கு உலகப் பன் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்கள். செயலாளர் அரிமா ஆர். சோமசுந்தரம் அவர்கள் நன்றி கூற, இரவு விருந்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

ஃ சென்னை கம்பன் கழகத்தின் சார்பாக அமரர் ஏவி. எம். நினைவு அறக் கட்டளையின் ஆறும் ஆண்டுச் சொற்பொழிவு 28-7-89 & 29-7-89 ஆகிய இருதினங்கள் சென்னையில் நடை பெற்றது.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்



வி.என்.சிதம்பரம்


— 43 —

திரு. குமாரிடம் விடை பெற்றுக் கொண்டு சான்பிரான் ஸிஸ்கோவிலிருந்து புறப்பட்டு சிக்காக்கோ வந்து சேர்ந்தேன். சிக்காக்கோ வந்ததும் அங்கு ஏதேனும் இந்துக் கோவில் இருக்கிறதா? என்று என் மகன் வள்ளியப்பனைக் கேட்டேன். அங்கு ராமர் கோவில் ஒன்று கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகவும், அதற்கிடையில் ஹரே ராமா ஹரே கிருஷ்ண கோவிலுக்கு சென்று வரலாம் என்றும் அவன் சொன்னான். அந்தக் கோவிலும் அமெரிக்கர்களாலே கட்டப்பட்டு, அமெரிக்கர்களாலே நடத்தப்படுகிற கோவில் என்றும் சொன்னான்.

ஹரே ராமா ஹரே கிருஷ்ண



அமெரிக்க நாட்டில் சிகாகோ நகரில் உள்ள ஹரே ராமா ஹரே கிருஷ்ண கோவிலில் வி. என். சிடி. அவர்கள்.



சிகாகோ நகர் ஹரே ராமா ஹரே கிருஷ்ணு கோவிலில் பஜனை நடைபெறும் காட்சி.

இயக்கத்தைப்பற்றி ஒரு தவருன கருத்தைக் கொண்டிருந்தவன் நான். அவர்கள் எல்லாம் ஏதோ போதை மாத்திரைக்கு அடிமையாகி ''ஹரே ராமா ஹரே கிருஷ்ணு'' என்று சொல்லிக் கொண்டு உலகெங்கும் ஹிப்பிகளாகச் சுற்றிக்கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த எண்ணம் பரவுவதற்கான காரணங்களில் இந்தியத் திரைப் படங்களும் ஒன்ருகும். இந்தியத் திரைப்படங்களில் அவர்களை ஹிப்பிகளாகவும், தவருன வழிகளில் போய்க் கொண்டிருப்பவர்களாகவும் சித்தரிக்கிருர்கள். இந்த எண்ணத்தோடு நானும் கிருஷ்ணன் கோவிலுக்குச் சென்றேன்.

அங்கு சென்று அங்கு உள்ள காட்சிகளைக் கண்டதுமே என்னுடைய எண்ணங்களை மாற்றிக் கொண்டேன். சிக்காக்கோவில் கிருஷ்ணன் கோவிலைப் பெரிதாகக் கட்டியிருக்கிருர்கள். இந்தியர்களும்' அமெரிக்கர்களும் பெருமளவில் வருகிருர்கள். அமெரிக்கர், அமெரிக்கராகக் காட்சியளிக்கவில்லை. இந்த இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும் இந்துக்களாகவே காட்சியளிக்கிருர்கள். இந்த இயக்கத்தைச் சேர்ந்த அமெரிக்கர்கள் அனைவரும் மொட்டை அடித்துக் கொண்டு குடுமி வைத்துக் கொண்டிருக்கிருர்கள். பஞ்சகச்சம் வைத்து மஞ்சள் நிறத்தில் வேஷ்டி கட்டிக் கொண்டிருக்கிருர்கள். ஆலயத்திற்குள் நுழையும் முன், கை, கால்களை சுத்தம் செய்து கொண்டு உள்ளே நுழைகிருர்கள். நெற்றியில் நாமம் அணிந்து கொண்டிருக்கிருர்கள். 200 பேர்கள் அமரக் கூடிய பெரிய கூடத்தில் பஜனை செய்கிருர்கள். பஜனை செய்யும்போது மிருதங்கம் முதலிய வாத்தியங்களை வாசிக்கிருர்கள். ஒரு குருசாமி தீர்த்தம் கொடுக்கிருர். இன்னொருவர் சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் கொடுக்கிருர். ராமரைப் பற்றியும், கிருஷ்ணரைப் பற்றியும் உள்ள புத்தகங்

களை பல மொழிகளில் அச்சிட்டு விற்பனை செய்கிறார்கள். மிகுந்த பக்தியோடு இருக்கிறார்கள். பஜனை செய்யும் போது உணர்ச்சி வசப்படுகிறார்கள். நமது நாட்டில் சபரிமலைக்குச் செல்கிற பக்தர்கள் பஜனை செய்வது போல அங்கு கிருஷ்ணன் கோவிலில் மணிக்கணக்கில் பஜனை செய்கிறார்கள். மற்றொரு கூடத்திற்குச் சென்றோமானால் அங்கு ஒவ்வொரு அறையாகத் தடுத்து கிருஷ்ணனுடைய உருவங்களைச் செதுக்கி வைத்திருக்கிறார்கள். அங்கு நாம் போய் நிற்கும்போது சீதையினுடைய தத்துவங்களை டேப்ரிக்கார்டில் பதிவு செய்து ஒலிபரப்புகிறார்கள். ''கோபத்தைக் குறை! ஒருபடி முன்னேறலாம்'' என்று சொல்லுகிறார்கள். இப்படியே பல தத்துவங்களைச் சொல்லி நிறைவாக கிருஷ்ணன் இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள். இப்படி மிகவும் பக்தியாக அங்கு ராமபிரானையும் கிருஷ்ணபிரானையும் வழிபடுகிறார்கள்.

அதைப் பார்த்தபோது என்னுடைய நினைவுகள் இந்தியாவிலுள்ள கயாவிற்கு வந்தது. சாக்ய வம்சத்தில் உதித்த இளவரசர் ஒரு புது மதத்தை நிறுவினார். அதுவே புத்த மதம். கௌதம புத்தர் துறவியாக வாழ்ந்த காலத்தில் தங்கிய இடம்தான் புத்த கயா எனப்படுகிறது. அந்த புத்தமதம் இன்று இந்தியாவில் பிரபலமாக இல்லையென்றாலும் உலகெங்கும் பரவியிருக்கிறது. இலங்கை, ஜப்பான், சைனா, பாங்காக் முதலிய நாடுகளில் புத்த மதம் செழித்தோங்கியிருக்கிறது.

இந்து மதத்தை சைவ மதத்தை யாராலும் அழித்து விட முடியாது. சில காலம் தளர்ச்சி அடைய வைக்கலாம். அதன் பிறகு நாணலைப் போல நிமிர்ந்து விடும். அதே போல வெளிநாடுகளில் நமது கட்டாயம் இல்லாமலேயே நமது மதம் மற்றவர்களாலேயே வளர்க்கப்படுவது கண்டு நான் மிகவும் பூரிப்படைந்தேன்.

(வளரும்)

திருமணம்

மதுரை நகரத்தார் சங்கத்தின் மேனேஜர் தேவகோட்டை அண. மெய்யப்ப செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி மல்லிகா (B. A.) க்கும் கண்டனூர் பி. ஏஎல். பிஎல். பிஆர். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அழகப்பன் (B. com) க்கும் தேவகோட்டையில் 10-7-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மதுரை நகரத்தார் சங்கத்தின் தலைவரும் தொழிலதிபருமான திரு. லெ. நாராயணன் செட்டியார், நாகப்பா சைக்கிள் மார்ட் பங்குதாரர் திரு ஆர்எம். முத்தழகப்பசெட்டியார் கணேஷ் ஆட்டோமோபைல்ஸ் உரிமையாளர் திரு. ஏஎல். பெரிய கருப்பன், அருளாடியார் திரு. சுப. பழநியப்ப செட்டியார் முதல்வர் திரு. என். சீனிவாசன், பேராசிரியர் முனைவர் அர. சிங்காரவடிவேலன், பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், ''நகரத்தார் குரல்'' துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரம் மற்றும் நகரத்தார் பெருமக்கள் திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

மணமக்களை வாழ்த்தி பாங்க் ஆப் மதுரையின் தலைவர் திரு. எஸ்வி. சண்முகவடிவேலு. தலைமைப் பொது மேலாளர் திரு. சுப. சபாபதி முனைவர் திருமதி இராதா தியாகராசன் திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமன். திரு. சுப. அ. நடராஜன் செட்டியார் காசிஸ்ரீ திரு. அரு. சோ. போன்றவர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

உங்கள் குரல்

''நகரத்தார் குரல்'' ஜூலை' 89 இதழில் திரு. உ. சண்முக நாதன் எழுதியுள்ள ''வேலை வாய்ப்பில் நம்மவருக்கே உதவுங்கள்'' என்ற கட்டுரை நூற்றுக்கு நூறு உண்மையை எடுத்துக் காட்டுகிறது. அதை வெளியிட்ட குரலுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண. அண்ணாமலை
சென்னை.

சென்ற இதழ் பக்கம் அத்தனையும் முத்து. அது நகரத்தார் சொத்து. குரல் இன்னும் ஓங்கி வளர இதுவே வித்து. வணங்குகிறேன் கைகுவித்து. தொடரட்டும் தூய பணி.

கவிஞர் சேது. அருணாசலம்
தேவகோட்டை.

முனைவர் பட்டம் பெற்ற வ. தேனப்பன் அவர்களைப் பற்றிய கட்டுரையும் எங்கள் ஊரைச் சேர்ந்த சொக்குசுப்பிரமணியன் அவர்களைப் பற்றிய பேட்டிக் கட்டுரையும் திருச்சிராப்பள்ளி வானொலி பற்றிய செய்திகளும் சிறப்பானவை.

எஸ். நாச்சியப்பன்
கண்டனூர்.

'எனது சங்கீத அனுபவம்' கட்டுரை மிக நீளமாக இருக்கிறதே என அஞ்சினேன். படிக்கப் படிக்க அது சுவையாக இருக்கிறது. பழைய கட்டுரையானாலும் அது புதுமையாக இருக்கிறது. நமது இனத்து சங்கீத வித்வானை நினைவு கூர்ந்து அதை வெளியிட்ட ''நகரத்தார் குர''லுக்கு எனது நன்றி.

சுப. அழகப்ப செட்டியார்
காரைக்குடி.

பெயருக்கேற்ப நம்மினத்துச் செய்திகளை உடனுக்குடனும் விரிவாகவும் ஒலிக்கச் செய்யும் குரலுக்கு எனது பாராட்டுக்கள். ஒவ்வொரு மாதமும் குரலைப் படிக்காவிட்டால் என்னவோ போல் இருக்கிறது.

வி. கண்ணப்பன்
சென்னை.

''நகரத்தார் குரல்'' இதழில் இடம் பெறும் பகுதிகளில் மிகச் சிறப்பானது திரு எல். சுந்தரம் எழுதி வரும் ''செய்திகள் வாசிப்பவர்...'' பகுதி தான். பல தரப்பட்ட செய்திகளை அதில் அறிந்து கொள்ள முடிகிறது. 4, 5 வரிகளே இருப்பதால் படிப்பதற்கு அது இலகுவாகவும் இருக்கிறது.

சித. சுப்பிரமணியன்
திருச்சி.

திரு. சொக்கு சுப்பிரமணியன் என்னுடைய இனிய நண்பர். அவரைப் பற்றி நான் அறியாத பல செய்திகளை நம்முடைய ''நகரத்தார் குரல்'' ஜூலை' 89 இதழில் தெரிந்து கொண்டேன். ''நகரத்தார் குரல்'' மேலும் சிறக்க என் இனிய வாழ்த்துக்கள்.

— பழ. இராமசாமி
மதுரை.

திருமணம்

பாகனேரி வே. வேலாயுதம் செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. நாகப்பனின் புதல்வியுமான செல்வி மீனாட்சிக்கும் கண்டரமாணிக்கம் மெ. சொ. கருப்பையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் மெய்யப்பன் என்ற ஆறுமுகத்திற்கும் 9-7-89 அன்று பாகனேரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஆவினிப்பட்டி சின்னக்கருப்பன்

திரு பிஎல். சின்னக்கருப்பன் என்ற கருப்பையா ஆவினிப்பட்டி ஆ. க. மு. பழ. பழநியப்ப செட்டியார்-வள்ளியம்மை ஆச்சியின் புதல்வராவார். மாத்தூர்க் கோயில் குளத்தூர் பிரிவைச் சேர்ந்தவர். 44 வயதுடைய இவர் சிறந்த ஐயப்ப பக்தர். 1969 முதல் 20 ஆண்டுகளாக பெரிய பாதையில் ஐயப்பன் கோவில் சென்று ஐயப்பனைத் தெரிசித்து வருகிறார். 1972 முதல் ஐயப்ப குருசாமியாக இருந்து கீழச்சிவல்பட்டி, விராமதி, பி. அழகாபுரி, ஆவினிப்பட்டி போன்ற செட்டி நாட்டு ஊர்களிலும் மதுரையிலும் ஐயப்பனின் மகிமையைப் பரப்பி வருகிறார்.

மதுரை பைபாஸ் சாலையில் அமைந்திருக்கும் ஐயப்பசாமி கோயில் நகரத்தார்களால் புதுப்பிக்கப் பெற்று 1983ல் குடநீராட்டு நடைபெற்றது. 1983 முதல் இவர் அதன் தலைவராக இருந்து செயலாற்றி வருகிறார்.

ஆவினிப்பட்டியில் சிவன் கோயில் இருக்குமிடம் ஆ. க. வகையைச் சேர்ந்தது. ஆவினிப்பட்டியில் புது ஊரணியை ஏற்படுத்தியவர்கள் ஆ. க. வகையினர். கற்பக விநாயகர் கோயில் ஆ. க. வகையைச் சேர்ந்தது. அந்த வகையைச் சேர்ந்தவர் இவர்.

திரு. சின்னக்கருப்பன் பழநிக்கும் வைத்தீஸ்வரன் கோயிலுக்கும் ஆண்டுதோறும் பாத யாத்திரையாகச் சென்று முருகனையும் முத்துக்குமார சாமியையும் வணங்கி வருகிறார்.

இவர் 1980ல் சிங்கப்பூர், கோலாலம்பூர், ஈப்போ, தைப்பிங், பினாங்கு போன்ற நாடுகளில் 25 நாட்கள் சுற்றுப் பயணம் சென்று வந்தார்.

கீரணிப்பட்டி முத்துமாரியம்மன் கோவில் பூத்திருவிழாவில் ஆண்டுதோறும் கலந்து கொண்டு சேவை செய்து வருகிறார். திருமணம் போன்ற நல்ல காரியங்களுக்கு இனப் பாகுபாடு பாராமல் தன்னால் இயன்ற அளவு நிதி உதவி செய்து வருவதோடு தேவையைப் பொறுத்து முன்னின்று உதவியும் செய்து வருகிறார்.


கைராசிக்காரரான இவர் பல புதுக் கணக்குகளை எழுதிக் கொடுத்திருக்கிறார். சிறந்த பொது நலத் தொண்டர். விருந்தோம்பலில் சிறந்தவர். இவரது அன்புப்



பிடியிலிருந்து தப்பி வருவது வெகு சிரமம். ஒருவரை உளமார நம்பிவிட்டால் அவருக்காக, தன் உயிரைக் கூடக் கொடுக்கத் தயங்காதவர்.

மதுரையிலும் சிலமானிலும் வட்டித் தொழில் செய்து வரும் திரு. சின்னக்கருப்பன் ஏராளமான நண்பர்களைப் பெற்றிருக்கிறார்.

இவர் காரைக்குடியில் நடைபெற்ற நகரத்தார் நல உரிமை மாநாட்டில் தீவிரத் தொண்டாற்றியவர். இலங்கைத் தமிழர்



செல்வி வள்ளியம்மையின் சடங்கு நிகழ்ச்சியில் (10-5-87) வி. என். சிடி. அவர்கள், திரு. பி எல். சின்னக்கருப்பன் - திருமதி ராஜேஸ்வரி சின்னக்கருப்பன்.

படுகொலையை எதிர்த்து மதுரை நகரத்தார் சங்கத்தினர் உண்ணு விரதம் இருக்கக் காரணமான வர்.

இவர் மதுரை நகரத்தார் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர். மதுரை பொன்னகரம் கடன் வழங்குவோர் சங்கச் செயலாளர் ஆவினிப்பட்டி, சேவினிப்பட்டி அரசு மருத்துவ மனை செயற்குழு உறுப்பினர். மற்றும் பல அமைப்புகளில் உறுப்பினர்.

நமது இதழின் ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்குச் சென்ற ஆண்டு ஜூலையில் மதுரையில் நடை பெற்ற மிகப் பெரிய பாராட்டு விழாவில் துணைத் தலைவர்களில் ஒருவராக இருந்து இவர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது.

அன்புமிக்க, தொண்டுள்ளம் கொண்ட திரு. சின்னக்கருப்பன் எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்காமல் தூங்க மாட்டார்.

இவருக்கு திருமதி ராஜேஸ்வரி என்ற மனைவியும் பழநியப்பன், ஐயப்பன் என இரு புதல்வர்களும், வள்ளியம்மை, கவிதா என இரு புதல்விகளும் உள்ளனர்.

— எல். சுந்தரம்

திருமணம்

அலவாக்கோட்டை சி. அரு. சின. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. சோமசுந்தரத்தின் புதல்வியுமான செல்வி நாச்சம்மை என்ற பொற்கொடி B com க்கும் வெற்றியூர் அரு. சுப. அருணாசலம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் குன்னக்குடியான் என்ற சுப்பிரமணியன் B. sc க்கும் அலவாக்கோட்டையில் 5-7-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

911/1

மதிப்புரை

காரைக்குடி சிவன் கோயில் குடநீராட்டு மலர்

பேராசிரியர், முனைவர் வெ. சு. அழகப்பன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு காரைக்குடி நகரத்தார் நகரச் சிவன் கோயில் திருக்குட நன்னீராட்டு மலர் வெளி வந்திருக்கிறது.

இம்மலரில் காஞ்சி சுவாமிகள், வாரியார் சுவாமிகள் கோவிலூர், திருவாவடுதுறை, தருமபுரம், குன்றக்குடி ஆதீன கர்த்தர்களின் ஆசியுரைகள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் முனைவர்கள் தமிழண்ணல், தே. செ ாக்கலிங்கம், வெ. தெ. மாணிக்கம், வெ. சு. அழகப்பன் மற்றும் திருமதி நா. வள்ளி, திரு. என் பி. இராமசாமி ஆகியோரின் கட்டுரைகள் முனைவர் ரெ. முத்துக்கணேசன், காசிஸ்ரீ அரு. சோ. கவிஞர் நா. மீனவன் ஆகியோரின் கவிதைகள் இடம் பெற்று ஞான மலராகத் திகழ்கிறது.

அனைத்து ஊர் நகரத்தார் புள்ளி விவரப் பட்டியல், நகரத்தார் திருப்பணி பற்றிய சுருக்கம் நகரக் கோயில் பற்றிய விவரங்கள், நகரத்தார் சாதிமுறை நியாயங்கள் ஆகியவற்றுடன் இத்திருக்குட நன்னீராட்டுத் திருப்பணிக்கு உதவியோரின் பட்டியலும் இத்திருக்கோயிலின் முக்கிய கட்டளைகளின் உபயதாரர் விவரமும் இடம் பெற்றுள்ளன. படித்துப் பயன் பெற வேண்டிய மலர்தான்.

— "எல்லெஸ்"

நாட்டரசன்கோட்டை தீர்த்தார்குளம் தேசிக விநாயகர் கோயில் குடநீராட்டு மலர்

பேராசிரியர் திரு. இராம. சிவசுப்பிரமணியனை பதிப்பாசிரியராகக் கொண்டு நாட்டரசன் கோட்டை தீர்த்தார்குளம் அருள்மிகு தேசிக விநாயகர் கோயில் திருக்குட நன்னீராட்டு விழா மலர் வெளியாகி இருக்கிறது.

இம்மலரில் ஆதீனகர்த்தர்களின் வாழ்த்துச் செய்திகள் திருவாளர்கள் வ. தேனப்பன் வித்வான் நா. சுப்பிரமணியன் அ. சொ. சுப்பையா போன்றவர்களின் பக்திக் கட்டுரைகளும் முனைவர் ச. ஆறுமுகம், 'காசிஸ்ரீ' அரு. சோ. அருட்கவி கு. செ. இராமசாமி கவிஞர்கள் இராகவன் முத்து, அழகாபுரி இளங்கோவன், அரு. சுந்தரம், சுப. காளிமுத்து போன்றவர்களின் அருமையான கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. விநாயகர் மலர் வழிபாடும் உள்ளது. படித்துச் சுவைக்கத்தக்க மலர் இது.

— ''எல்லெஸ்''

அலவாக்கோட்டைச் சிவன் கோயில் குட நீராட்டு மலர்

திரு. சுப. கருப்பையாவைத் தலைமையாகக் கொண்டு ''நகரத்தார் குரல்'' இதழின் துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரத்தின் உதவியுடன் அலவாக்கோட்டை அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேசுவரர் கோவில் திருக்குட நன்னீராட்டு விழா மலர் உருவாகி வெளிவந்திருக்கிறது.

எந்தக் குட நீராட்டு விழா மலரிலும் இல்லாத வகையில் இதில் 66 ஒளிப்படங்கள் இடம் பெற்றுள்ளன. அம்மன், சுவாமி படங்கள் பெரிய அளவில் அச்சாகி ஒளி தருகின்றன.

இம்மலரில் அலவாக்கோட்டைச் சிவன் கோயில் நகரத்தார் புள்ளிகளின் விவரங்கள், சிவன் கோயில் வரலாறு, சுப. கருப்பையாவின் நகரத்தார் வரலாற்றுக் கட்டுரை, முனைவர் சுப. அண்ணாமலை, முனைவர் பழ. முத்தப்பன், முனைவர் இராம. சுந்தரம் அருட்கவி கு. செ. இராமசாமி ஆகியோரின் அருமையான தத்துவ, இலக்கியக் கட்டுரைகளும் கவிஞர் இராகவன் முத்துவின் கவிதைகளும் நாக. நாகப்ப செட்டியாரின் 'தெய்வ வழிபாடு' என்ற கட்டுரையும் கரு. சிதம்பரத்தின் சிறுகதையும் பல ஆன்மீக துணுக்குச் செய்திகளும் இடம் பெற்று மலருக்கு மணம் தருகின்றன.

— ''எல்லெஸ்'

பள்ளத்தூரில் வழக்காடு மன்றம்

பள்ளத்தூர் நகரத்தார் சிவன் கோவிலில் ஆனித் திருவிழாவை முன்னிட்டு 6-7-89 அன்று ஒரு வழக்காடு மன்றம் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் திரு. லெட்சுமணன் வரவேற்றார். 'காரைக்கால் அம்மையாரின் செயல்கள் பொருந்தாது' என்ற வழக்கை முனைவர் திரு. சபா. அருணாசலம் தொடுக்க, பொருந்தும் என்று கவிஞர் திரு. சேது. அருணாசலம் எதிர் வழக்காடினார். நடுவர் பொறுப்பேற்ற 'புலவர் மாமணி' திரு. மா. முத்துராமன் 'பொருந்தும்' என்று தீர்ப்பு வழங்கினார். திரு. சி. இராமசாமி நன்றியுரை வழங்கினார்.

உ

காசி யாத்திரை
தீபாவளி கங்கா ஸ்நான ஸ்பெஷல்

16–10–89 முதல் 3–11–89 வரை 19 நாட்கள்

சென்னை - டெல்லி - ஆக்ரா - மதுரா - பிருந்தாவனம் - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - காசி - கயா - புத்தகயா - அலகாபாத் (பிரயாகை) அயோத்தியா - சென்னை.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து சுக்கில ஹு புரட்டாசி மீ 30 உ 16-10-89 புறப்படுகிறது.

இரண்டாவது வகுப்பு IIIடயர் ரயில் கட்டணம் ஊர்சுற்றிப் பார்க்கும் சிலவு காலை டிபன் காபி, பகல் சாப்பாடு, மாலை காபி இரவு ஆகாரம் உள்பட நபர் 1க்கு ரூ **1700/-** விரைவில் நபர் 1க்கு ரூ **700** - வீதம் அட்வான்ஸ் செலுத்தி டிக்கட் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

23–10–89 முதல் 3–11–89 வரை 12 நாட்கள்

சென்னை - காசி - கயா - புத்தகயா - அலகாபாத் - (பிரயாகை) அயோத்தியா - சென்னை.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து சுக்கில ஹு ஐப்பசி மீ 7 உ 23-10-89 புறப்படுகிறது.

இரண்டாவது வகுப்பு IIIடயர் ரயில் கட்டணம் ஊர்சுற்றிப் பார்க்கும் சிலவு. சாப்பாடு உள்பட நபர் 1க்கு ரூ. **1200/-** விரைவில் நபர் 1க்கு ரூ. **500** - வீதம் அட்வான்ஸ் செலுத்தி டிக்கட் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

அரசு வங்கி அலுவர்களுக்கு LFC, LTC பெற சான்றிதழ் வழங்கப்படும்.

தீபாவளியன்று காசியில் கங்கா ஸ்நானமும், காசிவிஸ்வ நாதர், தங்க அன்னபூரணி, தங்க விசாலாட்சி, மிட்டாய்த் திருவிழாவும் பார்க்கத்தக்கவை.

SRI MURUGAN TRAVEL AGENCY MADURAI

ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

9. வடக்கு ஆவணிமூல வீதி. மதுரை-1 போன் 31168

உரிமையாளர்: S. PR. சுப்பிரமணியன்

மண்டலாபிஷேக விழாவும் மலர் வெளியீட்டு விழாவும்!

அலவாக்கோட்டை அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேசுவரர் திருக்கோயிலின் மண்டலாபிஷேக விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் அலவாக்கோட்டையில் மேற்படி கோயிலில் 19-7-89 புதன் கிழமை மாலையில் சிறப்புற நிகழ்ந்தன.

19-7-89 புதன் கிழமை மாலை சுமார் 3-25 மணிக்கு மண்டலாபிஷேகமும் தீபாராதனையும் நடைபெற்றன, மாலை 4-00 மணி அளவில் பாகனேரியைச் சேர்ந்த செல்வி விஜயலெட்சுமி இன்னிசை வழங்கினார். அடுத்து மதுரை சைவமணி, இசைக் கதை நம்பி புலவர் நீ. சீ. சுந்தரராமன் குழுவினரின் 'மீனாட்சி திருமணம்' இசைக் கதை நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை 6-30 மணி அளவில் மலர் வெளியீட்டு விழா தொடங்கியது. திரு. பழ. பழநியப்பன் இறைவணக்கம் பாடினார். மலர்க் குழுவைச் சேர்ந்த திரு. சுப. கருப்பையா வரவேற்புரை நிகழ்த்தினார். திருப்பணிக் குழுவின் தலைவர் சின. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். அடுத்து பேராசிரியர் 'பொற்கிழிக் கவிஞர்' திரு. சொ. சொ. மீ. சுந்தரம் திருக்குட நன்னீராட்டு &மண்டலாபிஷேக நினைவு மலரை வெளியிட முதல் மலரினை வெ. கண. சித. வெ. கண்ணப்ப செட்டியார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

அடுத்து அத்திருக்கோயிலின் குட நீராட்டு விழாச் சிறப்புற நடைபெறத் தொண்டாற்றிய திருப்பணிக் குழுவின் தலைவர் சின. இராமநாதன் செட்டியார் அவர்கள், செயலாளர் & பொருளாளர் நாக. நாகப்ப செட்டியார் அவர்கள், யாக சாலை உபயதாரர் அண. அரு. சித. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் இராஜ கோபுரம் & சுவாமி புறப்பாடு உபயதாரர் வெ. கண. சித. வெ. கண்ணப்ப செட்டியார் அவர்கள் ஆகியோர் இவ்விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றனர்.

அடுத்து பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் நகரத்தாரின் திருப்பணி பற்றியும் தமிழ்ப் பணி பற்றியும் எடுத்துக் கூறினார்.

பாகனேரி வே. மாணிக்கம் செட்டியார் அவர்களும் "நகரத்தார் குரல்" இதழின் துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரமும் வாழ்த்துரை வழங்கினர்.

இத்திருக்குட நன்னீராட்டு விழா மலர் சிறப்புற அமைய பல்லாற்றானும் உதவிய திரு. எல். சுந்தரத்திற்கு நாக. நாகப்ப செட்டியார் அவர்கள் பொன்னாடை போர்த்தி, நன்றி நவின்றார்கள்.

திருமணம்

நாட்டரசன்கோட்டை கண. கணபதி செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் வெங்கடேசனுக்கும் மதகுபட்டி கரு. லெ. கப. இராமநாதன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி வேலுமணிக்கும் மதகுபட்டி சுப. லெ. ராம. இராமசாமி செட்டியார் இல்லத்தில் 9-7-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. 14-7-89 அன்று கோவை செல்வபுரத்தில் வரவேற்பு நடைபெற்றது.

பாடுவார் கோட்டம்: பொதுக் குழுக் கூட்டம்

செட்டிநாட்டு மகாகவி பாடுவார் முத்தப்ப செட்டியார் பிறந்த ஊராகிய கீழ்ச்சிவல்பட்டியில் பாடுவார் முத்தப்பரின் நினைவினைப் போற்றும் வகையில் 'பாடுவார் கோட்டம்' அமைக்க இருக்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் இக்கோட்டத்திற்கான செயற் குழு அமைக்கப்பெற்றது. மதுரை வங்கியின் முன்னாள் தலைவர் இராம. முத்தையா செட்டியார் அவர்களின் சீரிய தலைமையில் இக்குழு அயராது பணியாற்றி வருகின்றது. அமரர் சோமலே அவர்களின் கனவை நனவாக்கும் வண்ணம் இக்குழுவினர் செயலாற்றி வருகின்றனர்.

பாடுவார் கோட்டத்தின் 4-ஆம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் கீழ்ச்சிவல்பட்டி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேல்நிலைப் பள்ளியில் 25-6-89 அன்று நடைபெற்றது. கோட்டத்தின் தலைவர், இராம. முத்தையா செட்டியார் அவர்கள் தலைமையேற்றுக் கோட்டம் அமைப்பதற்கான ஆயத்தப்பணியினையும் செட்டி நாட்டு மக்களின் மேலான ஒத்துழைப்பினையும் வேண்டி உரையாற்றினார்கள்.

கீழச்சிவல்பட்டி அம்மன் சன்னதி வீதியில் அமைந்துள்ள பாடுவார் திருக்கோவிலுக்கு அண்மையிலேயே கோட்டம் அமைக்க இடம் வாங்கி உள்ளனர் என்ற இனிய செய்தியைக் கோட்டத் தலைவர் மகிழ்வுடன் தெரிவித்தார்.

அன்று தினம் பாடுவார் கோட்டச் சிறப்பு மலரையும் கோட்டத் தலைவர் வெளியிட, கிருஷ்ணப்ப செட்டியார் அவர்கள் முதல் மலரைப் பெற்றுக் கொண்டார்கள். கோட்டத் தலைவர் மற்றும் செயலாளர் திரு இராம. சிவராமன் துணைச் செயலாளர் திரு. நா. சுப்பிரமணியன். திரு. தே. சொக்கலிங்கம், திரு. சோம. சிவப்பிரகாசம், திரு. வ. தேனப்பன், திரு. அழகாபுரி இளங்கோவன் முதலியோர் உரையாற்றினார்கள்.

முனைவர் பட்டம் பெற்றவர்கள் கவனத்திற்கு...

நகரத்தார்களில் ஏராளமான பேர் ஆய்வு செய்து முனைவர் (Doctorate) பட்டம் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு முனைவர் பட்டம் பெற்றவர்களின் முழுமையான பட்டியல் ஒன்றை ''நகரத்தார் குரல்'' இதழில் வெளியிட விரும்புகிறோம், ஆகவே முனைவர்கள் தங்களது பெயர், சொந்த ஊர், கோயில், கல்வித் தகுதி ஆற்றி வரும் பணி, ஆய்வு மேற்கொண்ட தலைப்பு, பட்டம் பெற்ற பல்கலைக் கழகம், பட்டம் பெற்ற ஆண்டு போன்ற முழு விவரங்களையும் எமக்குத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— ஆசிரியர்

''நகரத்தார் குரல்''

கருணை காட்டுங்கள்

எல். சுந்தரம்

நமது அன்றாட வாழ்வில் முக்கிய அங்கம் வகிக்கும் பலவற்றுள், கையெழுத்தும் ஒன்றாகும். தெளிவான கையெழுத்தால் காரியங்கள் தங்கு தடையின்றி நடைபெற வாய்ப்பு உண்டு. நம்முடைய தெளிவான கையெழுத்தால் நம்மைவிடப் பிறர் பயனடைவார்கள்.

மருத்துவர்களுடைய கையெழுத்துக்கள்தான் உலகிலேயே மோசமானவை என நிரூபிக்கப்பட்டுள்ளன. மருந்துக் கடைக்காரர்கள் ஊகத்தின் அடைப்படையில்தான் நமக்கு மருந்துகளைத் தருகிறார்கள். (சில சந்தர்ப்பங்களில் மருந்துகள் மாறி தவறான விளைவுகள் ஏற்படுவதும் உண்டு) சிறுநீரக நிபுணர்கள், பொது அறுவை நிபுணர்கள் எழுதுவதைப் படிப்பது மிகவும் சிரமம் என்றும் மகப்பேறு மருத்துவர்கள், இதய நோய் நிபுணர்களின் கையெழுத்துக்கள் சற்றுப் பரவாயில்லை என்றும் வெளி நாட்டு மருத்துவக் கழகப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

தட்டச்சு, தொலைபேசி, கணிப்பான்பொறி போன்றவற்றின் வளர்ச்சி காரணமாக கையால் எழுதும் வழக்கம் நம் நாட்டில் படிப்படியாகக் குறைந்து வருகிறது. அவசரமும் பரபரப்பும் மிகுந்து வரும் இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலையில் பலர் அவசியமானபோது கூடக் கடிதம் எழுதுவதில்லை. அப்படியே எழுதினாலும் தெளிவாக எழுதுவதில்லை. வேகத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறார்கள். இதனால் கையெழுத்துச் சீர்குலைந்து போகிறது.

எழுதுவதற்குப் பலர் நல்ல பேனாக்களைப் பயன்படுத்துவதில்லை. அவற்றை நன்கு பராமரிப்பதும் இல்லை. கூர்மையான பேனாக்களால் வேகமாகவும் தெளிவாகவும் எழுத முடியாது. பட்டையாக எழுதும் பேனாக்களினால் வேகமும்தெளிவும் ஏற்படும்.

மோசமான - தெளிவற்ற கையெழுத்து பழங்காலத்திலும் இருந்திருக்கிறது. நெப்போலியனது கையெழுத்து யாருக்கும் புரியாது. அவர் எழுதிய ஒரு சாதாரணக் கடிதத்தைப் படித்த ஒரு படைத் தலைவர் அதைப் போருக்கான ஆணை என நினைத்துப் படையுடன் புறப்பட்டு விட்டாராம்!

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த கென்னடியின்

கையெழுத்து வங்கிகளுக்குத் தலைவலியைக் கொடுத்ததாம். அவர் ஒருமுறை கையெழுத்துப் போட்டதுபோல் இன்னொரு முறை போட்டதில்லையாம்.

நியூயார்க்கில் "டிரிப்யூன்" செய்தித்தாளின் ஆசிரியர் ஒரு செய்தியாளரை, திறமையின்மை காரணமாகப் பதவி நீக்கம் செய்து கைப்படக் கடிதம் எழுதினார். பிறகு அது எழுதியவர் உட்பட பலருக்கும் புரியாததால் அந்தச் செய்தியாளர் பல ஆண்டுகள் பணியில் நீடித்தாராம். அது மட்டுமல்ல அக்கடிதத்தைப் பாராட்டுச் சான்றிதழாகவும் பயன்படுத்திக் கொண்டாராம்!

தனது குஜராத், இந்தி மொழிக் கையெழுத்துக்கள் அழகாகஇல்லை என்று காந்தியடிகளே வருத்தப்பட்டு தம் சுயசரிதையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பர்மாவில் (இப்போது அதன் பெயர்: மியான்மார்) உள்ள பள்ளத்தூரைச் சேர்ந்த திரு. காந்தி அண்ணாமலை எனக்கு அவ்வப்போது கடிதம் எழுதுவார். அப்படி ஒருமுறை அவர் எழுதியபோது "என்னுடைய எழுத்தைப் படிப்பது கஷ்டமாக இருக்கும். இருந்தாலும் எப்படியும் படித்து விடுங்கள்" என்று எழுதியிருந்தார். அவருடைய கையெழுத்துப் பற்றி அவருக்கே தெரிந்திருக்கிறது.

கையெழுத்தைப் பார்த்து அதை எழுதியவரின் குணங்களையும் நோய்களையும் கூற முடியும் என்று சோதிடர்களும், மனோ தத்துவ நிபுணர்களும் கூறுகிறார்கள்.

பணக்காரர்களும் உயர் பதவிகளில் உள்ளவர்களும் புரியும்படியாக எழுதுவதில்லை என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. நல்ல கையெழுத்து நாம் பணிபுரியும் நிறுவனத்தின் உரிமையாளரிடத்திலும் நம்முடன் பணிபுரியும் மேலதிகாரிகளிடமும் உறவினர், நண்பர்களின் நடுவிலும் நமக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தருகிறது.

கடந்த 32 ஆண்டுகளாக பணி ரீதியாக நான் அதிக அளவில் எழுதி வருகிறேன். உறவினர்கள், நண்பர்கள் போன்றவர்களுக்குத் தேவைப்படும்போது கையால் கடிதங்களை எழுதி வருகிறேன். என்னுடைய 'கையெழுத்துத் தெளிவாக இல்லை; மோசமாக இருக்கிறது' என்று இதுவரை ஒருவர் கூடச் சொன்னது கிடையாது. மாறாக என்னுடைய கையெழுத்துத் தெளிவாக பெண்களுடைய எழுத்தைப்போல் குண்டு குண்டாக அழகாக இருப்பதாகப் பாராட்டி இருக்கிறார்கள்; பாராட்டியும் வருகிறார்கள்.

தட்டச்சு பழகினால் கையெழுத்துச் சீர் குலைந்து விடும் என்று கூறுவதெல்லாம் சரியல்ல. சோம்பலில்லாது தொடர்ந்து தெளிவாகவும் நிதானமாகவும் எழுதி வந்தால் நம் கையெழுத்தை மிஞ்ச ஆள் இருக்காது.

நம் கையெழுத்து அச்சடித்

தது போல் இருக்க வேண்டு மென்ற அவசியமில்லை. தெளிவாக இருப்பதுதான் முக்கியம். வரிகளுக்கு நடுவிலும் சொற்களுக்கு நடுவிலும் தேவையான இடைவெளிவிட்டு வேகமில்லாமல் நிதானமாக எழுதினால் எழுத்து மிக அருமையாக அமையும்.

எழுதும் போது கவனிக்க வேண்டியவை இவை:-

எழுதுவதற்கு வசதியாக அமர்ந்து எழுதுதல்.

தங்கு தடையின்றி எழுதக் கூடிய நல்ல பேனாவைப் பயன் படுத்துதல்.

எழுதும் வேகத்தைக் குறைத்து தெளிவாக எழுதுதல்.

ஆக நான் கேட்டுக் கொள்வ தெல்லாம் தெளிவாக எழுதி 'படிக்கப் போகிறவர்கள் மீது கருணை காட்டுங்கள்' என்பது தான்.

சிவன் கோவில் இல்லாத நகரத்தார் ஊர்கள்

1. க. அழகாபுரி
2. கொ. அழகாபுரி
3. ஒக்கூர்
4. நேமுத்துப்பட்டி
5. பனங்குடி
6. மகிபாலன்பட்டி
7. விராமதி
8. விரையாச் சிலை

பனையப்பட்டி வினைதீர்த்தான் செட்டியார்

பனையப்பட்டி வி. கா. வினை தீர்த்தான் செட்டியார் அவர்கள் இரணிக் கோயிலைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அரியக்குடி இராமனுஜ அய்யங்கார் அவர்களிடமும் செம்மங்குடி சீனிவாச அய்யர் அவர்களிடமும் முறையாகச் சங்கீதம் பயின்றவர்கள். மைசூர் டி. சௌடையா, பாலக்காடு மணி போன்ற பிரபல வித்வான்கள் இவர்களது கச்சேரிகளுக்குப்



பக்கவாத்தியங்கள் வாசித்திருக்கிறார்கள். நகரத்தார் சமூகத்தில் முழு நேர சங்கீத வித்வானாகப் பவனி வந்தவர்கள் இவர்கள் ஒருவரே.

தேவகோட்டை தமிழிசைச் சங்கத்தை துவக்கி வைத்த இவர்கள், திருவையாறு ஸ்ரீ தியாகப் பிரும்ம ஆராதனைக் குழுவில் செயலாளராகத் தொண்டாற்றியிருக்கிறார்கள்.

பனையப்பட்டியில் உள்ள இவர்களது இல்லத்திற்கு 'பாகவதர் இல்லம்' எனப் பெயர். வினைதீர்த்தான் செட்டியார் அவர்கள் 12-6-80 அன்று இறைவன் திருவடி அடைந்தார்கள்.

— இத்தகவல்களை வினைதீர்த்தான் செட்டியார் அவர்களின் புதல்வர் திரு. கே. வி. சொக்கலிங்கம் நமக்குத் தெரிவித்துள்ளார்.

பாராட்டு விழா

வேந்தன்பட்டி கேஆர் ஆறுமுகம் அவர்களுக்கு 22-5-89 அன்று வேந்தன்பட்டி சிவன் கோயிலில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது.

குப. நல்லகுமார் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் வரவேற்றுப் பேசினார். திரு. சா. ஏ. சாத்தப்ப செட்டியார் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். டாக்டர் மெ. சுந்தரம் திரு. தெ. பழ. அழகப்ப செட்டியார், அறமனச் செம்மல் திரு. சோம. இயற்பகை செட்டியார் திரு. கும. தமிழரசன் மற்றும் பலர் பாராட்டிப் பேசினர். திரு. மு. மெய்யப்பன் நன்றி கூறினார்.

விஸ்வேஸ்வரர் அறக் கட்டளை சார்பில் கோட்டையூரில் ரூ. 2. 25 கோடி செலவில் ஒரு மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது.

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
11—5—1933

மறைவு :
3—8—1984

திரு. S. மணி என்ற

முத்துக்கருப்பன் செட்டியார்

நெஞ்சத்தில் தூய்மையினை வாழச் செய்தாய்
நினைவெல்லாம் நகரத்தார் நலனுக் கென்றாய்
பிஞ்சுமனக் குழந்தையெனச் சிரிப்பாய் உந்தன்
பெயராலும் குணத்தாலும் மணியே ஆனாய்
கொஞ்சுமொழி கேட்காமல் குடும்பத் தோடு
கூட்டாளி நண்பரெல்லாம் குலுங்கச் சென்றாய்
வஞ்சமனக் காலன்உனை அழைத்தான் என்றே
மலர்ந்தமுகம் காட்டாமல் மறைத்துக் கொண்டாய்!

என்றும் நினைவு கூரும் :

RM. முத்தழகப்பன், மற்றும் **தொழிலாளர்கள்**

நாகப்பா சைக்கிள் மார்ட்
மதுரை, தஞ்சாவூர், திருவாரூர், கும்பகோணம்
நெய்வேலி, சென்னை

நாகப்பா ஆட்டோமொபைல்ஸ்
மதுரை, கும்பகோணம், சென்னை

நாகப்பா மோட்டார்ஸ், மதுரை & சென்னை

இந்தியா ஸ்பிரிங்ஸ்

நாகப்பா இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ்

N. C. M. டிரேடர்ஸ்

நாகப்பா ஸ்பிரிங்ஸ் பிரைவேட் லிமிடெட்
ராணிப்பேட்டை

தோடுடைய செவியில் ஓடி நீ ஓதுவையோ மாணிக்கமே!

தன் உயிரினும் மேலாய்த் தமிழினை மதித்தவர் முனைவர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள். 'தமிழ் இரண்டாந்தரம் உடையதன்று. அது தில்லைப் பொன்னம்பலத்தில் பாடப்பெற வேண்டும்' என அயராது பாடுபட்டார் அவர். நடராஜர் ஆலயக் குடநீராட்டின் போது அவரும், அவரது நண்பர்களும் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறி



வித்து, ஏற்பாடு செய்தார்கள். பின்னர் சமரசம் ஏற்பட்டு வ. சுப. மாணிக்கனார் அவர்களின் அவா நிறைவேறியது. ஆமாம் இன்றும் கனகசபையில் இரண்டாம் காலத்தின் போது தீட்சிதர் பெருமகனார் ஒருவரின் இனிய குரலில் தமிழ்ப் பாடலைக் கேட்டு இன்புற்று மெய்மறக்க முடிகிறது. ''எண்ணிய எண்ணியாங்கு எய்துபர் எண்ணியர் திண்ணிய ராகப் பெறின்'' என்னும் குறளுக்கேற்பக் கிடைத்த இந்த வெற்றிக்காக பாராட்டு விழா ஒன்று சிதம்பரத்தில் நடைபெற்றது.

தனக்குக் கிடைத்த பாராட்டுக்கள் அனைத்தையும் தில்லை வாழ் அந்தணர் பெருமக்கட்கு உரித்தாக்கிய வ. சுப. மா. அவர்கள் ''நான் கருவியே தவிர, செயல்படுத்தியவர்கள் தீட்சிதர்கள்'' என விளக்கமளித்தார்கள். அவர்களிடம் தமிழ்க் காதல் இருந்ததே தவிர, பிறர் மீதோ பிறமொழி மீதோ வெறுப்பு இல்லை என்பது தெளிவு.

அம்பலம் ஏறிய தமிழ் இன்னும் உட்சென்று கருவறையில் உள்ள ஆடல்வல்லானின் காதருகே ஒலிக்க வேண்டும் என்ற அவாவினை அவர்கள் வெளியிட்டார்கள். வ. சுப. மா. மறைந்தார் என்ற செய்தி கேட்டவுடன் தோடுடைய செவியில் ஓடி ஓதுதற்கே மாணிக்கனார் இறையடி சேர்ந்தாரோ என நினைக்கத் தோன்றிற்று.

— **அரு. இராமநாதன்**
அண்ணாமலை நகர்

திருமணம்

சொக்கலிங்கம்புதூர் கவிஞர் பழ. மு. முத்தழகப்ப செட்டியார் அவர்களது புதல்வி செல்வி சரோஜா **B. Com** க்கும் கோட்டையூர், அ. க. ராம. மெ. கி. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் புதல்வன், செல்வன் மெய்யப்பன் **D. Agri** க்கும் 23-6-89 அன்று சொக்கலிங்கம் புதூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

உ

சிவமயம்

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

சொக்கநாதபுரம்

சி. அழ. சொ. காசி செட்டியார்



தோற்றம் :
23 – 8 – 27

மறைவு:
3—8—86

அயராத உழைப்பிலும் அன்பை வலியுறுத்தி
நேர்மையை நிலை நிறுத்தி எங்களை
வாழ வைத்த தெய்வத்தின் பொற்
பாதங்களில் எங்கள் கண்ணீர்
அஞ்சலியை காணிக்கை ஆக்குகிறோம்,
எங்கள் நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவிருக்கும்!

இங்ஙனம் :

சொ. மீனாட்சி ஆச்சி (தாயார்) கா. தெய்வானை ஆச்சி (மனைவி)

கா. சோமசுந்தரம் B. Com. (மகன்)

வை. மீனா (மகள்) கா. வைத்தியநாதன் B. A. (மருமகன்)

10, திருமலை சந்து, கோரிப்பாளையம், மதுரை-2

ஈரோடு சங்கத்தில் ஆண்டு விழாவும் பாராட்டு விழாவும்

ஈரோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் 22 ஆம் ஆண்டு விழாவும் 'தர்ம ரத்னு' வலையபட்டி பிஎல். கே. குப்பான் செட்டியார் அவர்களுக்குப் பாராட்டு விழாவும் 18-6-89 அன்று ஈரோட்டில் சிறப்பாக நடைபெற்றன.

'தர்ம ரத்னு' பிஎல். கே. அவர்களின் தர்மச் சிந்தனை பற்றியும், கொடையுள்ளம் பற்றியும் திருவாளர்கள் ஏஎல். எஸ். அழகப்பன், கவிஞர் செல்ல கணபதி, ஈரோடு எஸ்பி. முத்துக் கருப்பன் செட்டியார் ஆகியோர் எடுத்துரைத்தார்கள் பிஎல். கே. குப்பான் செட்டியார் அவர்கள் சங்கக் கட்டிடத்தை முன்னேற்றம் செய்ய ரூ. 5000 - நன்கொடையாக வழங்கினார்கள்.

சங்கத்தின் 22 ஆம் ஆண்டு விழாவிற்கு கேஆர். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமை ஏற்றார்கள். 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் 'திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்று பகல், மாலை, இரவு விருந்து அளிக்கப் பெற்றது.

நிர்வாகிகள் தேர்வு

18-6-89 காலை 11-00 மணி அளவில் சங்கத்தின் பொதுக் குழு கூடி 1989-1991 வரை இரண்டு ஆண்டுகளுக்கு நிர்வாகிகளைத் தேர்வு செய்தது.

அதன்படி கேஆர். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தலைவராகவும் திரு. வி. வி. திருப்பதி செட்டியார் துணைத் தலைவராகவும் திரு. என். இராமநாதன் செட்டியார் செயலாளராகவும் திரு. ஆர்எம். இராமநாதன் செட்டியார் திரு. ஆர்எம். இராமசாமிச் செட்டியார் ஆகிய இருவரும் துணைச் செயலாளர்களாகவும் திரு. என். எஸ். எஸ். சிவசுப்பிரமணியம் பொருளாளராகவும் ஏக மனதாகத் தேர்வு செய்யப் பெற்றனர்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ கோவிலூர் மடாலயத்தில் ஸ்ரீமத் மகாதேவ ஞான தேசிகர் அவர்களுக்கு 10-7-89 திங்கட்கிழமை அஸ்த நட்சத்திரத்தில் குருபூஜை நடைபெற்றது.

ஃ கோவிலூர் மடாலயத்தில் ஸ்ரீமத் இராமநாத ஞான தேசிகர் அவர்களுக்கு 14-7-89 வெள்ளிக்கிழமை அனுஷ நட்சத்திரத்தில் குரு பூஜை நடைபெற்றது.

ஃ பலவான்குடி நகரச் சிவன் கோயிலில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அங்கு சுக்கில ஆண்டு தை மாதம் குடநீராட்டு நடைபெறும் எனச் சொல்லப்படுகிறது.

ஃ நாநயாவின் 7 ஆவது செயற்குழுக் கூட்டம் அந்த அமைப்பின் துணைத் தலைவர் இராம. முத்துப் பழநியப்ப செட்டியார் அவர்களின் மதுரை இல்லத்தில் 10-7-89 அன்று நடைபெற்றது.

ஃ பள்ளத்தூர், கண்டனூர், இராயவரம், கண்டரமாணிக்கம், சொக்கநாதபுரம், ஆ. தெக்கூர் போன்ற ஏழு ஊர் நகரத்தார்களின் குல தெய்வமான சொக்கநாதபுரம் அருகே கத்தப்பட்டில் உள்ள தொட்டியத்துக் கருப்பர் கோயிலில் 4-9-89 (ஆவணி மீ 19 உ) அன்று குடநீராட்டு விழா நடைபெற உள்ளது.

ஃ பாகனேரியில் 21-7-89 & 22-7-89 (ஆடி மீ 6 உ & 7 உ) ஆகிய இரு நாட்கள் ஆடிப் பூஜை நடைபெற்றது.

ஃ அலவாக்கோட்டையில் செம்புச்சாமி மடம் சார்பாக 21-7-89 & 22-7-89 ஆகிய இரு நாட்கள் ஆடிப் பூஜை நடைபெற்றது.

ஃ நடராஜபுரத்தில் உள்ள மிளகாய்ச்சாமி மடம் சார்பாக

21-7-89 (ஆடி மீ 6 உ) அன்று ஆடிப் பூஜை நடைபெற்றது.

ஃ நகரக்கோயில்கள் 9ல் ஒன்றான இரணிக் கோயிலின் குடநீராட்டு விழா பிரமோதூத ஷூ சித்திரை மாதம் நடைபெறும் எனக் கூறப்படுகிறது.

ஃ பாகனேரி இராம. முத்துப் பழநியப்ப செட்டியார் அவர்களைத் திருப்பணிக் குழுத் தலைவராகக் கொண்டு இயங்கும் பாகனேரி சிவன் கோயில் திருப்பணிக் குழு திருப்பணி வேலைகளைத் துரிதமாகச் செய்து வருகிறது. பிரமோதூதஷூ வைகாசி மாதம் இதன் குடநீராட்டை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஃ பள்ளத்தூர் நகரத்தார் பெருமாள் கோயிலின் குடநீராட்டு சுக்கில ஷூ தை மீ 16 உ நடைபெற உள்ளது.

ஃ பள்ளத்தூர் நகரச் சிவன் கோயிலின் குடநீராட்டு சுக்கில ஷூ தை மீ 19 உ நடைபெற உள்ளது.

ஃ வேலங்குடி ஸ்ரீ பெரியநாயகி அம்பாள் அருள்மிகு வயல் நாச்சியம்மன் கோயில்களில் ஏழூர்ச் செவ்வாய் விழா 11-4-89 அன்று நடைபெற்றது.

ஃ பாகனேரியைச் சேர்ந்த டாக்டர் என். என். கண்ணப்பன் அவர்கள் 1-5-89 வரை 176 இலவச மருத்துவ முகாம்களை நடத்தியிருக்கிறார்கள். 1988 ஆம் ஆண்டின் சிறந்த மருத்துவர் என இவர்களை மதுரை அமுத சுரபி கலைமன்றம் தேர்வு செய்து அமைச்சர் மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் மூலம் பரிசளித்துக் கௌரவித்துள்ளது.

ஃ சோழபுரம் அருள்மிகு அருள்மொழி நாதர் அறம்வளர்த்தாள் ஆலயத்தின் திருக்குட நன்னீராட்டு விழா 10-9-89 (ஆவணி மீ 25 உ) நடைபெற உள்ளது


'கம்ப்யூட்டர்' லெட்சுமி

அறிவியல் உலகின் அற்புதங்களில் 'கம்ப்யூட்டர்' ஒன்றாகும். அந்தக் கம்ப்யூட்டரில் பல அதிசயங்களை நிகழ்த்தி வருகிறார் ஒன்பதே வயதாகும் இந்த லெட்சுமி.

கம்ப்யூட்டரில் **Word star, Basic, D-Base, Gobal** என நான்கு வகைப் பாடங்கள் இருப்பதாகவும் அதில் **Word star** என்பது கம்ப்யூட்டரை எப்படி இயக்குவது என்ற தொடக்க பாடத்தைச் சேர்ந்தது என்றும் இதை ஒரே வார காலத்தில் முழுவதும் கற்றுக்கொண்டு தனக்கும் தனது வகுப்புத் தோழிகளுக்கும் தேவையான பள்ளி நேரப் பட்டியலை சிறுமி லெட்சுமி தயாரித்துத் தங்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டார் என்றும் திருச்சி லான் கம்ப்யூட்டர் சென்டரில் இன்ஸ்ட்ரக்டராக இருந்து வரும் செல்வி உமா கூறுகிறார்.

''சென்னையில் முதல் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த லெட்சுமியை கம்ப்யூட்டர் கண்காட்சி ஒன்றுக்கு அழைத்துச் சென்றேன். அதுமுதல் இவளுக்கு அதில் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. மயிலாடுதுறையில் லான் கம்ப்யூட்டர் சென்டர் இலவச கம்ப்யூட்டர் பயிற்சி நடத்திய போது லெட்சுமி வகுப்பு நடத்தி வியப்புக்குள்ளாக்கினாள்'' என்று லெட்சுமியின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிவரும் அவருடைய ஆயாள் (தாய் வழிப் பட்டி) கானாடுகாத்தானைச் சேர்ந்த திருமதி காவேரி சபாரத்தினம் கூறுகிறார்.

''லெட்சுமி எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்புமிக்கவள். பேச்சிலும் நடனத்திலும் கெட்டிக்காரி. எது கேட்டாலும் உடனுக்குடன் பதில் அளிப்பாள்'' என்று



சிறுமி லெட்சுமியும் அவரது பாட்டி திருமதி காவேரி சபாரத்தினமும்.

மேலும் கூறுகிறுர் திருமதி காவேரி சபாரத்தினம்.

சிறுமி லெட்சுமி நாச்சியாபுரம் திரு. டி ஆர். சுப்பிரமணியன்-திருமதி சாந்தியின் புதல்வி, தந்தை திரு. சுப்பிரமணியன் கோவை கனரா வங்கியில் பணி புரிந்து வருகிறுர். சிறுமி லெட்சுமி இப்போது கோவை ஸ்டேன்ஸ் கான்வெண்டில் நான்காம் வகுப்புப் பயின்று வருகிறுர்.

'Computer Girl' எனப் பலராலும் பாராட்டப்படும் சிறுமி லெட்சுமி அறிவு வளர்ச்சியில் மற்றவர்களை விடத் தனித்து நிற்கிறுர். எதிர்காலத்தில் இவர் விஞ்ஞானியாகத் திகழ்ந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

— எல். சுந்தரம்

திருமணம்

கல்லல் கரு. பெரி. அள. ரெ. மீனுட்சிசுந்தரம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி இராஜேஸ்வரி B. Sc B. Ed க்கும் பள்ளத்தூர் சு. பெ. தே. நா. தேனப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சிதம்பரம் M. A க்கும் கல்லலில் 9-7-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ நம்மை நாமே வெறுக்காமலிருப்பது நமது முதற் கடமையாகும். முன்னேற்றமடைவதற்கு முதலில் சுயநம்பிக்கை அவசியம்.

— சுவாமி விவேகானந்தர்

நாவல் இலக்கியமும் நகரத்தார்களும்

முனைவர் லெட்சுமி மீனாட்சிசுந்தரம்

(இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக் கழகம்)

தற்கால இலக்கியம் 'ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரோடி' உள்ள பெருந் துறையாகும். இத் துறையுள் ஒரு பிரிவு நாவல் இல்க்கியம். மனித சமுதாயத்தோடு தொடர்புடைய பல்வேறு கருப்பொருட்களை களனாகக் கொண்டது நாவல் இலக்கியம். நாவலாசிரியன் தன்னைச் சுற்றியுள்ள வாழ்க்கையிலிருந்து கதை நிகழ்ச்சிகளை, பாத்திரங்களைப் படைத்துக் காட்டுவது உண்டு. மானிட சமுதாயத்தில் நாவலாசிரியன் கண்ட சில மாதிரிகள் பாத்திரங்களாகப் பிறப்பதுமுண்டு.

நாவலாசிரியர்களுள் சிலர் குறிப்பிட்ட சாதி, இனம், வர்க்கம், வட்டாரம் போன்ற அடிப்படையில் கதையின் கரு, பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவ்வகை நாவலாசிரியர்களை இரு பிரிவாகப் பகுக்கலாம். முதல் வகையினர் குறிப்பிட்ட இனம், சாதி போன்றவற்றைச் சேர்ந்தவர்கள். இரண்டாம் வகையினர் இவற்றைச் சாராதவர்களாய், ஆயின் இவற்றைப் பற்றிய ஆழமான அறிவைப் பெற்றவர்களாய் இருப்பர். இவ்விரு திறத்தாரும் குறிப்பிட்ட இனம் பற்றிய விரிவான பல செய்திகளைத் தம் நாவல்களில் எழுதிச் செல்வர்.

குறிப்பிட்ட இனம் தொடர்பான ஆழமான அனுபவ அறிவிற்கு எடுத்துக்காட்டானவர்கள் 'காவிரிப் பாடகர்' தி. சானகிராமன்; லா. ச. இராமாமிர்தம் ஆகியோர். இவர்கள், தாம் நன்கறிந்த பிராமண சமூகத்தைச் சார்ந்த கதைகளையே படைத்துக் காட்டுவர். இவர்களுக்கு முன்னோடியானவர் தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை. தி. ம. பொன்னுசாமி பிள்ளைக்கு முன் வாழ்ந்த நடேசசாஸ்திரி, குருசாமிசர்மா, மாதவையா போன்றோர் தாமறிந்த பிராமண சமூகக் குறை நிறைகளை நாவல்களில் வெளிப்படுத்தினர். ஆயின் தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை இவர்களினின்று வேறுபட்டவர். இவர் நகரத்தார் பற்றிய விரிவான




செய்திகளை ஆதாரமாகக் கொண்டு கி. பி. 1903இல் 'கமலாட்சி' என்ற நாவலை எழுதினர்.

நாவலின் நோக்கத்தை அவர் வெளியிடுகையில் இத்தகைய நாவலினால் ஏற்படும் நல்விளைவுகளாக, தான் கருதுவனவற்றை தெளிவுபடுத்தினார். ''குறைகளுள் எளிதில் சீர்திருத்திக் கொள்ளக்கூடிய சிலவற்றை எடுத்துக் காட்டினால் அவைகளை

விலக்கவும், அதனால் நமது தேசம் சிறப்படையவும் ஒருவாறு முகாந்திரம் ஏற்படும் என்பதே இக்கதைகளை எழுதுவதில் முக்கியமாக நான் கொண்டிருக்கும் உட்கருத்து'' எனக் குறிப்பிடுகிறார். விசுவநாத செட்டியார் என்ற பாத்திரத்தின் வழி நம் சமூகத்தைப் பற்றி விரிவாக ஆராய்கிறார். கமலாட்சி என்ற நாவலில் வரும் ஒரு பாத்திரம் நம் சமூகத்தைப் பற்றிக் குறை கூறுவதாகவும், அதற்கு விசுவநாத செட்டியார் விளக்கமளிப்பதாகவும் ஓர் உத்தியைப் பயன்படுத்தி அரிய விளக்கங்களை அளிக்கிறார் தி. ம. பொன்னுசாமிப் பிள்ளை.

தனிக்குடித்தனம் செய்வது இன்று நம்மவரிடையே பரவலாகக் காணப்படும் ஒருபழக்கம். இதற்கு நம் குல வழக்கப்படி 'வேறுவைத்தல்' என்று மற்றொரு பெயருண்டு. குடும்ப உறுப்பினர்களிடையே நல்லுறவு திருமணமான இளையோர்க்குப் பொறுப்புணர்ச்சி, சிறிய தகராறுகளைத் தவிர்க்கும் நல்ல மனம், போன்ற பல பண்புகளை வேறுவைக்கும் பழக்கம் வளர்க்கிறது. டாக்டர் மு. வரதராசனும் இப்பழக்கத்தைத் தன்னுடைய ''கள்ளோ? காவியமோ?'' நாவலில் குறிப்பிட்டுள்ளமை இவண் நினையத்தக்கது.

திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகளுக்கு இன்னாரை அழைப்பது; சகோதரர்களின் மனைவியர் முறைபோட்டு வேலை செய்வது, அண்ணன் - தம்பி



கண்டவராயன்பட்டி அரு. சி. கா. சிங்காரம் செட்டியார் அவர்களுக்கும் - திருமதி சுந்தரம் ஆச்சிக்கும் பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் 1-7-89 அன்று அருள் நெறிச் செல்வர் நா. அருணாசலன் அவர்கள் தலைமையில் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழாச் சிறப்பாக நடைபெற்றது. (மணிவிழாத் தம்பதியர் நா. அருணாசலன் அவர்களின் மாப்பிள்ளையும் மகளுமாவார்.

உறவானாலும் கணக்குப் பார்த்துக் கொள்வது போன்ற பழக்கங்கள் கமலாட்சி நாவலில் நியாயமானவையே என்று விளக்கப்படுகின்றன. விசுவநாத செட்டியார், ''நாங்கள் செய்யும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நியாயத்தைக் கருதி இருக்கிறதே யொழியப் போதுமான நியாயம் இல்லாமல் இராது'' என விளக்குகிறார். உண்மையில் நம் முன்னோர்கள் தொடங்கி வைத்த பழக்கங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் உண்மை பொதிந்திருப்பதை அறிகிறோம். இதனைப் பொன்னுசாமிப் பிள்ளை விவாதித்திருப்பது பாராட்டிற்குரியது. ''இரங்கூன் நான் துரைத்தன சேவை செய்திருந்த இடமாகையால் நாட்டுக் கோட்டை நகரத்து ஸாவகாரிகளான வேளாண்செட்டிகளோடு கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக நெருங்கிப் பழகி அவர்கள் இயல்பையும் அறிந்திருக்கிறேன்'' எனத் தன் அனுபவத்திற்கான காரணத்தையும் காட்டுகிறார். நகரத்தாரின் அறச் சிந்தை நாடறிந்த, உலகறிந்த நல்லியல்புகளுள் ஒன்று. இவ்வியல்பும் பாராட்டப்படுகின்றது.

நகரத்தார் சமூகத்தை நன்கறிந்த மற்றொரு நாவலாசிரியர் கலைமணி கொத்தமங்கலம் சுப்பு. இவருடைய நாவலில் (தில்லானா மோகனம்பாள்) வரும் ராமன் செட்டியார் என்ற பாத்திரம் நகரத்தார் சமூகப் பிரதிநிதியாவார். இப்பாத்திரத்தின் மூலம் நகரத்தார் சமூகத்தினரின் நல்லியல்புகளைப் படைத்துக் காட்டுகிறார். கலைமணி கொத்தமங்கலம் சுப்புவின் மற்றொரு படைப்பான 'ராவ் பகதூர் சிங்காரம்' என்ற புதினம் செட்டிநாடு வட்டார மணம் கமழும் புதினமாகும். இப்புதினத்தில் காட்டப்

படும் மருதப்பர் இல்லம் செட்டி நாட்டுப் பகுதிகளில் அமைந்துள்ள இல்லங்களேயே பிரதிபலிக்கிறது. முகப்பு, பட்டகசாலே, இரண்டாம் கட்டு, கலியாணக் கொட்டகை போன்ற அமைப்புக்களேக் கொண்டது மருதப்பரின் வீடு, மேல்மங்கலம், கீழ்மங்கலம் என்ற இரு ஊர்களிலும் கதை நிகழ்கிறது. இவ்வூர்ப் பெயர்களில் கொத்தமங்கலம் என்ற பெயர் மறைந்திருப்பது புலனுகும். 'சுருளிப் பாறை' என்று கலேமணி குறிப்பிடும் இடம் செட்டிநாட்டுத் தெற்கூர்க்கு (ஆ. தெக்கூர்) அண்மையில் உள்ள அரளிப்பாறை என்ற ஊரே. மஞ்சுவிரட்டிற்குப் புகழ் பெற்றது இவ்வூர். மஞ்சுவிரட்டுக்கு வரும் காளேகளின் பெயர்களேக் கூறும் ஆசிரியர் பில்லமங்கலம், கண்டதேவி, கல்லல், கண்டனூர்க்காரி, கொத்தமங்கலம் முதலிய செட்டிநாட்டு ஊர்ப் பெயர்களேக் குறிப்பிடுகிருர். கோனுபட்டுக் குருசாமி என்ற பாத்திரத்தின் பெயரில் உள்ள அடைமொழியான கோனுபட்டு செட்டிநாட்டு ஊர்களில் ஒன்றே. வீட்டமைப்பில் மட்டுமின்றித் திருமண ஏற்பாட்டிலும், பெட்டி சப்பிளயிலும், செட்டி நாட்டார் கடிதம் எழுதும் முறையிலும், சொல்லாட்சியிலும் செட்டிநாட்டு மணம் கமழுகின்றது. தி. ம. பொன்னுசாமிப்பிள்ளே, கொத்தமங்கலம் சுப்பு போன்ருேர் நகரத்தார் சமூகத்தைப் பற்றிய செய்திகளே நுட்மான நோக்குடன் எழுதியுள்ளனர். இவர்களின் பணியினுல் மற்ற சமூகத்தினர் நகரத்தார் சமூகம் பற்றிய உண்மைகளே அறியவும், குறிப்பிட்ட இனத்தினரின் பண்பாட்டை அறியவும் வாய்ப்புள்ளது. இதனுல்தான் இலக்கியத்தைப் புறக்கணித்துவிட்டுச் செய்யப்படும் எந்தவிதமான சமூகவியல் ஆய்வும் பயனளிப்பதில்லே எனவும்; அது குருடனின் செயலேயே ஒக்கும் எனவும் மேனுட்டு ஆய்வாளர்கள் கருதுவர்.

நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த சிலரும் நாவல்கள் எழுதியுள்ளனர். எம். எஸ். சுந்தரேசன் செட்டியார் எழுதிய 'தருமசீலன்' என்ற நாவலும், மேலேச் சிவபுரி பனேயப்ப செட்டியார் எழுதிய ஐந்து நாவல்களும் (காந்திமதி, மணிவாசகன், அமிர்தம், சண்முகநாதன், சந்திரசேகரன்) கண்ணதாசன் எழுதிய அதைவிட ரகசியம் என்ற நாவலும் நகரத்தார் சமூகத்திலும் நாவலாசிரியர்கள் உள்ளனர் என்ற உண்மையைத் தெரிவிக்கின்றன. இவர்களேத் தவிர மலேசியாவில் வாழ்ந்தவர்கள் தம் படைப்புகளில் நகரத்தார் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டினரா என்பது அறியுமாறில்லே. தருமசீலன் என்ற நாவலேத் தவிரப் பனேயப்ப செட்டியாருடைய படைப்புக்கள் கிடைத்தில. கண்ணதாசனின் நாவலுக்கும் நம் சமூகத்துக்கும் யாதொரு தொடர்புமில்லே. எனவே நாவல் இலக்கியத்துறையில் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த படைப்பாளிகள் செய்ய வேண்டிய பணிகள் பல உள.

'தருமசீலன்' என்ற நாவலில் வரும் பாத்திரங்கள் வணிகர் குலத்தினர். பழமொழி, சொல்லாட்சிகளில் செட்டி நாட்டு வழக்கைக் காணலாம். நம்மவர் குலத்தொழிலாம் வட்டித்தொழில் பற்றிய குறிப்புண்டு.

மொழி வாழ்ந்தால்தான் இனம் வாழும் என்பது பொது நெறி. எனவே மொழியின் மூலமாகத் தம்மினமும் வாழ வேண்டும் என்ற எண்ணம் நம்மினத்தைச் சேர்ந்த இளேஞர்களுக்கு உருவாக வேண்டும். பல இலக்கியச் சாதனேகளே எதிர்காலம் பெறவேண்டும்! இதுவே மொழியுணர்வுடைய ஒவ்வொருவரின் பேரவா!

பெரியகுளத்தில் பட்டிமன்றம்

பெரியகுளம் அருள்மிகு கௌமாரியம்மன் கோவில் ஆனிப் பெருந்திருவிழாவில் நகரத்தார் மண்டகப்படியான 6 ஆம் திருவிழாவன்று (15-7-89) "குடும்ப முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிப்பவர் தாயா? தாரமா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. 'தாயே' என்ற அணியில் புலவர் இராசரத்தினம், சு. சுபாஷ்சந்திர போஸ், கவிஞர் அரு. நாகப்பனும் 'தாரமே' என்ற அணியில் புலவர் இரா. காந்திமதி, புனிதா ஏகாம்பரம், சி. எஸ். விசாலாட்சியும் வாதிட்டனர். நடுவர் பொறுப் பேற்றிருந்த முனைவர் சரஸ்வதி இராமநாதன் 'தாரமே' எனத் தீர்ப்பு வழங்கினர். நகரத்தார் சார்பில் திரு. கே. ஜோதியும் திரு. பிஎல். கனகசபையும் பொன்னுடை அணிவித்து நன்றி கூறினர்கள். விழா ஏற்பாடுகளை திரு. எல். கே. எல், வெள்ளையப்பன் சிறப்பாகச் செய்திருந்தார்.

செய்தி

மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் நிறுவப் பெற்றுள்ள செட்டி நாட்டரசர் ராஜாசர் மு. அ. முத்தையாச் செட்டியார் அவர்களின் உருவச் சிலையை 12-8-89 சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் தமிழக முதல்வர் கலைஞர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் திறந்துவைத்து உரையாற்ற இருக்கிறார்கள்.

நகரத்தார் புத்தக வங்கி நிறைவேற்றிய தீர்மானங்கள்

மதுரை நகரத்தார் புத்தக வங்கியின் நிர்வாகக் குழுக் கூட்டம் 9-7-89 அன்று மாலை மதுரை நகர விடுதியில் நடைபெற்றது. அப்போது கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன:--

ஃ மாணவர்களின் எண்ணிக்கை புத்தக வங்கியில் அதிகரித்து உள்ளபடியால் அவர்கள் தேவையை நிறைவு செய்யும் வகையில் புத்தகங்களின் எண்ணிக்கையை உயர்த்துவது. அதற்கு நம்சமூகத்தினரிடம் நிதி வசூலிப்பது; புத்தகங்கள் பெறுவது.

ஃ ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாணவரிடமும் ரூ. 20/- சேவைக் கட்டணமாக வசூலிப்பது.

ஃ 1989 ஆகஸ்ட் முதல், வங்கி ஒவ்வொரு ஆங்கில மாதமும் இரண்டாம் சனிக்கிழமைகளில் காலை 10 முதல் 1 மணி வரை இயங்குவது.

ஃ ஒவ்வொரு உறுப்பினரும் நான்கு புத்தகங்களை வழங்குவது

ஃ வங்கியின் முதலாம் ஆண்டு விழாவை அக்டோபர் 2 ஆம் தேதி சிறப்பாக நடத்துவது.

ஃ தியாகராசர் கலைக் கல்லூரி முதல்வர் டாக்டர் சொக்கலிங்கம் அவர்களின் ஆலோசனைப்படி மாணவர் கையேடு வெளியிடுவது.

ஃ நகரத்தார் சங்கத்தின் நிர்வாகத்தினரைச் சந்தித்து சங்கத்திலுள்ள புத்தகங்களை மாணவர்கள் பயன்படுத்தும் பொருட்டுப் பெறுவது.

விழுப்புரம் நகரத்தார் சங்கம்

விழுப்புரம் நகரத்தார் சங்கம் விழுப்புரத்தில் உள்ள காமராஜ் நகராட்சி மேல்நிலைப்பள்ளி, அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் ஆறு முதல் பத்து வகுப்பு படிக்கும் அனைத்துச் சமூகத்தைச் சார்ந்த 25 உடல் ஊனமுற்ற மாணவ மாணவியர்கட்கு இலவசப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களை 10-7-89 அன்று வழங்கியது.

இச்சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் தமிழறிஞர் வ. சுப. மாணிக்கனாரின் மறைவுக்கு இரங்கல் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. நகரத்தார் சங்கத்தின் பொருளாளர் திரு. லெ. ராம. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள் விழுப்புரம் காமராஜ் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு தொலைக் காட்சி பெட்டியினை நன்கொடையாக அளிக்க இசைந்துள்ளார்கள்.

நமது சமூகத்தைச் சார்ந்த 6 முதல் 12 வகுப்புப் படித்து வரும் மாணவ மாணவியர்க்கு கல்வி உதவித் தொகையாக இந்த ஆண்டு ரூபாய் மூவாயிரம் வழங்கப்பட்டுள்ளது.

இயற்கை எய்தினர்

பாங்க் ஆஃப் மதுரையின் தலைமைப் பொது மேலாளர் அரண்மனை சிறுவயலைச் சேர்ந்த சுப. சபாபதி அவர்களின் தாயார் திருமதி தெய்வானை ஆச்சி அவர்கள் தமது 76 ஆவது வயதில் 27-6-89 அன்று சென்னையில் இயற்கை எய்தினார்கள்.



மணமகள்: மல்லிகா (B. A) (மதுரை நகரத்தார் சங்கத்தின் மேனேஜர் தேவகோட்டை திரு. அண. மெய்யப்பனின் புதல்வி) மணமகன்: அழகப்பன் (B. Com) (கண்டனூர் திரு. பி ஏஎல். பிஎல். பிஆர். சொக்கலிங்கம் செட்டியார் புதல்வன்) இவர்கள் திருமணம் 10-7-89 அன்று தேவகோட்டையில் நடைபெற்றது.

மணப்பாறை நகரத்தார் சங்கம்: நிர்வாகிகள் தேர்வு

மணப்பாறை நகரத்தார் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் 23-7-89 அன்று கூடியது. அப்போது சென்ற ஆண்டு செயல்பட்ட நிர்வாகிகளான பொன்புதுப்பட்டி திரு. பிஎல். எம். பழனியப்ப செட்டியார் தலைவராகவும் தேவகோட்டை பிஎஸ். பிஎல். பிஎஸ். பிச்சப்ப செட்டியார் துணைத் தலைவராகவும் கடியாபட்டி பிஎல். சேதுச் செட்டியார் செயலாளராகவும் ஒ. சிறுவயல் சி. லெக்ஷ்மணன் துணைச் செயலாளராகவும் வலையபட்டி அ. லெக்ஷ்மணன் பொருளாளராகவும் தொடர்ந்து இந்த ஆண்டும் செயல்படுவது எனத் தீர்மானம் நிறைவேறியது. வருகிற 17-9-89 ஞாயிறன்று மணப்பாறையிலிருந்து ஒரு பேருந்து மூலம் நகரக் கோவில்கள் ஒன்பதுக்கும் சுற்றுலா சென்று சுவாமி தெரிசனம் செய்து வருவது என்றும் நகரத்தார் சங்கத்துக்குச் சொந்தமான காலியிடத்தில் சங்கத்துக்காக கட்டிடம் ஒன்றைக் கட்டுவது எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பெற்றது.

வேலை வாய்ப்புப் பயிற்சி முகாம்

மாதம் தோறும் நடைபெறும் 'நாநயா' வின் வேலை வாய்ப்புப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பயனடைய பொதுச் செயலாளர், நாநயா, 5/484 நக்கீரர் தெரு, சதாசிவ நகர், மதுரை-625 020 என்ற முகவரிக்கு எழுதலாம்.

படைப்பு

'படைப்பு' என்பதும் 'சாமிக்குப் படைத்தல்' என்பதும், நகரத்தார்கள் தம் முன்னோர்களை நினைவில் கொண்டு வணங்கிப் போற்றும் செயலாகும். திருமணம் முதலிய மங்கல விழாக்கள் வரும்போது அவற்றுக்கு முந்திய நாட்களில் தம் முன்னோரை வணங்கிப் போற்றும் இப்படைப்பை மேற்கொள்வர். இதில் புலால் அவசியமென்றும் அஃதின்றேல் கோழியும் முட்டையும் அவசியமென்றும் அதுவும் கூடாதென்றால் அவற்றுக்குப் பதிலாகப் பணியாரம் வைத்து வணங்கலாம் என்றும் கூறுவர்.

வாழ்வரசியாக இளம் வயதில் இறந்து விட்ட பெண்களுக்கும் கண்ணகி வழிவந்த மரபினர் படைப்பிட்டுக் கும்பிடுவர். படைப்புக்கு என்று தனியறை இருக்கும். இறந்தவர் சைவ உணவு உட்கொள்பவராயின் சைவ உணவையும், இறைச்சி உணவு உண்பவராயின் இறைச்சி உணவையும் படைப்பர்.

''கல்லெடுத்துப் புலால் ஊற்றிக் கொள்ளுதல்'' என்ற சடங்குடன் இப்படைப்புத் தொடர்புடையதாக உள்ளது. தொல்காப்பியத்திலும் கல்லெடுத்தல் பற்றிய சூத்திரத்தில் ''சீர்த்தகு மரபில் பெரும் படை'' என்று வருகிறது.

அதற்கு நச்சினார்க்கினியர், ''அக்கல்லைத் தெய்வமாக்கி, அதற்குப் பெருஞ் சிறப்புகளைப் படைத்தல்'' என்று உரையெழுகிறார்.

தொல்காப்பியர் குறிப்பிட்ட சமுதாயச் சடங்கை, அதே பெயரால் அம்முறைப்படியே மூவாயிரம் ஆண்டுகட்குப் பின்னரும் நாம் பின்பற்றி வருகிறோம்.

— சிவ. வசந்த்
புதுக்கோட்டை

வாரியார் விருந்து

ஃ மாசிலா மனமே ஈசன் கோயில்.

ஃ பயிருக்கு முள் வேலி; பணத்துக்குத் தருமம் வேலி.

ஃ சிந்தனையும் தெய்வ வந்தனையும் மனிதனுடைய வாழ்வை உயர்த்துகின்றன.

ஃ எல்லாம் தெரிந்தவர்களும் ஏதும் தெரியாதவர்களும் உலகில் இல்லை.

ஃ அயர்ச்சி இல்லாத முயற்சி உயர்ச்சி தரும்.

ஃ அன்னம், நெய், உப்பு மூன்றையும் கையால் படைக்கக் கூடாது.

ஃ யானையைப் போல குளிப்பாயாக; தேனீயைப் போல உழைப்பாயாக.

ஃ தூய உணவை உண்டால் தூய எண்ணம் வளரும்.

ஃ குருவருளும் திருவருளும் பெற்றால் இறைவன் ஞான வடிவைக் காணலாம்.

ஃ ஆடம்பரமும் டாம்பீகமும் அற்ற எளிய வாழ்க்கையில் வாழப் பழகு.

ஃ தானமும் தவமும் உயிர் பிரிந்த பின்பும் கூட வரும்.

தொகுப்பு: வ. ராமசாமி
கோட்டையூர்

கும்பகோணத்தில் 18 திருக்கோயில்கள்

கும்பகோணத்திலுள்ள சைவ, வைணவ ஆலயங்களின் பெயர்களும் இறைவன், இறைவியின் பெயர்களும் வருமாறு:

சிவத் தலங்கள்

1.	கும்பேஸ்வரர் கோயில்:	இறைவன்: ஆதிகும்பேஸ்வரர் இறைவி: மங்களநாயகி
2.	சோமநாதர் கோயில்: (ஓர் இறைவனுக்கும் இறைவிக்கும் இரண்டு பெயர்கள்)	இறைவன்: சிக்கேசர் இறைவி: தேனார்மொழியம்பிகை இறைவன்: சோமேசர் இறைவி: சோமநாயகி
	பிரிதொரு இறைவன் இறைவி	இறைவன்: மாலீசர் இறைவி: மங்களநாயகி
3.	காசி விஸ்வநாதர் கோயில்:	இறைவன்: விசுவேசர் இறைவி: விசாலாட்சி
4.	நாகேஸ்வரர் கோயில்:	இறைவன்: நாகேசர் இறைவி: சிவகாமி

5. அபிமுகேசர் கோயில்: இறைவன்: நாளிகேசர், அபிமுகேசர்
இறைவி: அமுதவல்லி

6. கௌதமேசர் கோயில்: இறைவன்: கௌதமேசர்
இறைவி: சௌந்தரநாயகி

7. கம்பட்ட விசுவநாதர் கோயில்: இறைவன்: விஸ்வேசர்
இறைவி: ஆனந்தநிதி

8. பாணபுரீஸ்வரர் கோயில்: இறைவன்: பாணபுரீஸ்வரர்
இறைவி: சோமகலாம்பாள்

மேலும் மகாமகக் குளத்தைச் சுற்றி படித்துறைகளில் கீழே கண்ட 16 சிவலிங்கமூர்த்தங்கள் சிறு சிறு கோயில்களில் அமைந் துள்ளன:

1. பிரமதீர்த்தேஸ்வரர் 2. முகுந்தேஸ்வரர் 3. தளேஸ்வரர் 4. விருஷபேஸ்வரர் 5. பரணேஸ்வரர் 6. கோணேஸ்வரர் 7. பக்திஹேஸ்வரர் 8. பைரவேஸ்வரர் 9. அகத்தீஸ்வரர் 10. வியானேஸ்வரர் 11. உமைபாகேஸ்வரர் 12. நைருதீஸ்வரர் 13. பிர்மேஸ்வரர் 14. கங்காதரேஸ்வரர் 15. முக்ததீர்த்தேஸ் வரர் 16. க்ஷேத்ரபாலேல்வரர்.

விசேஷமாக பிர்மாவிற்குத் தனிக் கோவில் உள்ளது.

வைணவத் தலங்கள்:

1. சாரங்கபாணி கோயில்: பெருமாள்: சாரங்கபாணி
தாயார்: கோமளவல்லி

2. சக்ரபாணி கோயில்: பெருமாள்: சக்ரபாணி
தாயார்: விஜயவல்லி

3. வராகப்பெருமாள் கோயில்: பெருமாள்: வராகப்பெருமாள்
தாயார்: பூமிதேவி

4. ராமசாமி கோயில்: பெருமாள்: ராமச்சந்திரமூர்த்தி
தாயார்: சீதாப்பிராட்டி

5. ஸ்ரீ கோயில்சாமி கோயில்:
6. ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில்:
7. வேதநாராயணப் பெருமாள் கோயில்:
8. வரதராஜப்பெருமாள் கோயில்:
9. ராஜகோயில்சாமி கோயில்:
10. சரநாராயணப் பெருமாள் கோயில்:

(கும்பகோணத்தில் மகாமகம் 1992 ஆம் ஆண்டு நிகழ இருக்கிறது)

— கே ஆர். பழநியப்பன்
தேவகோட்டை

நவக்கிரகங்களும் நாயகிகளும்!

மானகிரி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நவக்கிரகங்கள் தம்பதி சமேதராக வீற்றிருந்து கல்யாணக் கோலத்தில் காட்சி தருகிறார்கள். அங்கு சென்று நவக்கிரகங்களைத் தெரிசித்து வந்தால் திருமணம் நிச்சயமாகின்றது.

கீழே நவக்கிரகங்களின் பெயர்களும் துணைவியார்களின் பெயர்களும் வருமாறு:—

நவக்கிரகங்கள்	துணைவியார்கள்
1. சூரியன் (ஞாயிறு)	சஞ்சிகை, சாயாதேவி என இரு துணைவியர்
2. சந்திரன் (திங்கள்)	உரோகிணி
3. செவ்வாய் (அங்காரகன்)	சத்திதேவி
4. புதன் (ஞானி)	ஞானிதேவி
5. வியாழன் (பிரகஸ்பதி)	தாரை
6. சுக்கிரன் (வெள்ளி)	சுபகீர்த்தி
7. சனி	நீலா
8. இராகு	ஸிம்ஹீ
9. கேது	சித்ரலேகா

இதேபோல் இராங்கியத்தில் புதிதாக அமைக்கப் பெற்றுள்ள அருள்மிகு வள்ளி—தெய்வானை உடனுய சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நவக்கிரகங்கள் தம்பதி சமேதராய் அவற்றிற்குரிய வாகனத்தோடு காட்சி தருகிறார்கள்.

எம். அழகம்மை B. Sc. M. Ed.
மானகிரி

குங்குமம்

மஞ்சளும் குங்குமமும் மங்களகரமான பெயர்கள். அவ்விரண்டையும் மறக்கும் நிலையில் இன்று பல ஆச்சிமார்கள் உள்ளனர். அவர்கள் கடையில் விற்கும் ஒட்டுப் பொட்டை வாங்கித் தங்கள் நெற்றிகளில் ஒட்டி மகிழ்வதோடு குழந்தைகளுக்கும் ஒட்டி விடுகிறார்கள்.

நெற்றியில் திலகமிட குங்குமம்தான் சிறந்தது. குங்குமம் அணிந்து கொள்பவர்களைத்தான் ''மகாலெட்சுமி மாதிரி இருக்கிறாள்'' என்பார்கள். நாகரீகம் வளர வளர நம் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படுவது வருந்துதற்குரியது.

உடலிலுள்ள சகல நோய்களையும் தீர்க்கவல்ல அருமருந்து திருநீறும் குங்குமமும்தான். அவற்றின் பயன் அறிந்துதான் நம் முன்னோர்கள் ஆண்டாண்டுக் காலமாக அவற்றைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

எனவே நம் பெண்களும் சிறுமிகளும் இனியாகிலும் ஒட்டுப் பொட்டைத் தவிர்த்து குங்குமத்தைப் பயன்படுத்த வேண்டும்.

- கே ஆர். பழநியப்பன்.

மனப் பக்குவமும் வைராக்கியமும்!

மகரிஷி யாக்ஞவல்க்யரிடம் சில சந்நியாசிகளும், ஜனக மஹாராஜாவும் கல்வி கற்று வந்தனர். அரசன் பாடங்களில் எழும் சந்தேகங்களைக் குருவிடம் கேட்க அவர் அரசன் மனதைத் தெளிய வைத்தார். அதனால் பணக்காரனாகிய அரசனுக்கு குரு அதிக மதிப்புக் கொடுப்பதாக சந்நியாசிகள் எண்ணினார்கள். இவ்விஷயம் குருவிற்கு ஞான திருஷ்டியால் தெரியவந்து அவர் அவர்களுக்குப் புத்தி புகட்ட எண்ணினார்.

திடீரென மிதிலையிலிருந்து சேவகன் வந்து மிதிலாபட்டணம் தீக்கிரையாகிக் கொண்டிருக்கிறது என்றும் என்ன முயற்சி செய்தும் தீயை அணைக்க முடியவில்லை என்றும் சொன்னான். சந்நியாசிகள் தங்களுடைய பொருட்களெல்லாம் சேதமாகி விடுமே என்றெண்ணி மிதிலைக்கு ஓடினார்கள். அரசனோ 'எனக்குச் சொந்தமான ஆத்மானந்தம் எறிக்கப்படவில்லையே' என்றெண்ணிக் கவலையற்று இருந்தான்.

மிதிலைக்குச் சென்ற சன்னியாசிகள் நகரம் தீப்பற்றி எரியாமலிருப்பதைப் பார்த்து, ''ஆஹா! நம் குரு நம் எண்ணத்தை ஞானதிருஷ்டியால் கண்டு நம்மைப் புத்தியுறச் செய்த மாயை இது'' என்று தெரிந்து திரும்ப வந்து குருவைப் பார்த்து மன்னித்தருள வேண்டினர்.

''மனப்பக்குவமும், வைராக்கியமும் உடைய மன்னன் தன் நாட்டைப் பற்றியே சிந்திக்காத போது நீங்கள் மட்டும் உங்கள் உடைமைகளை எண்ணிப் போனீர்கள் அல்லவா! தீவிரமான வைராக்கியத்தை உணர்த்தவே இச்சம்பவம் நிகழ்த்தப் பெற்றது'' என்று குரு சிஷ்யர்களுக்கு உணர்த்தினார்.

- கே.ஆர். பழநியப்பன்

தேவகோட்டை

பிள்ளையார்பட்டியில் மணி விழாப் பட்டிமன்றம்

கண்டவராயன்பட்டி அரு. சி. கா. சிங்காரம் செட்டியார்-சுந்தரம் ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 1-7-89 அன்று பிள்ளையார்பட்டியில் நடைபெற்றது. கவிஞர் திரு. சே. கனகசபை வரவேற்றார். அதனையொட்டி ''கண்ணதாசன் மிகுத்துப் பாடியிருக்கும் பாடல்கள் குடும்பப் பாடல்களா? பிற துறை பற்றிய பாடல்களா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நிகழ்ந்தது 'குடும்பம் பற்றிய பாடல்களே' என்று திருமதி சி. எஸ். விசாலாட்சி செல்வன் பழனிக்குமாரும் 'பிற துறைப் பாடல்களே' என்று திரு. நா. சுப்பிரமணியன், திருமதி அலமேலு முகுந்தனும் வாதிட்டார்கள். நடுவர் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் 'குடும்பம் பற்றிய பாடல்களே' எனத் தீர்ப்பு வழங்கினார். தொண்டர் திரு. நா. அருணாசலன் வாழ்த்துரை வழங்கினார்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்